TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

**Under Section 173 BNSS** 8108580

1. District : DVAC மாவட்டம் | PS: CC-V காவல்நிலையம் | Year: 2024 ஆண்டு | FIR No.: 03 மு.த.அ. எண் | Date: 24.10.2024 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (As amended in 2018) Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106 (old CrPC 102)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 23.10.2024 நாள் முதல் | Date to : 23.10.2024 நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : 16.00 hrs நேரம் முதல் | Time to : 21.30 hrs நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 24.10.2024 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : 10.30 hrs நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் : 24.10.2024 on Registration of FIR.

4. Type of Information : Written/ Oral : Written-Typed
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Around 9 kms
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. T. Chandrasekaran குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Thasildar தொழில் | (g) Address : Taluk Excise Officer, Guindy Taluk, Guindy. முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tmt. V. Umamaheshwari, Assistant (SRO-incharge) Virugambakkam SRO, No.45A Arcot Road, Virugambakkam Chennai-92.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

K. ...
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Chennai City-V,
Alandur, Chennai - 16

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..............................................,.. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 24.10.24

[signature] 24/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.10.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K.BINDHU
Rank: நிலை Inspector of Police, Vigilance and Anti-Corruption, Chennai City-V, Alandur, Chennai-16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண். 03/2024 பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (2018 ல் திருத்தப்பட்டது) மற்றும் BNSS பிரிவு 106 (Cr.PC பிரிவு 102) வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 ன் தொடர்ச்சி பின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு - 5 ன் ஆய்வாளர் கி.பிந்து ஆகிய நான் 24.10.2024 அன்று 10.30 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு.த.சந்திரசேகரன், வட்ட கலால் அலுவலர் கிண்டி வட்டம், சென்னை (சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் உத்தரவின்பேரில்) என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.தி.கந்தசாமி, காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப்பரிவு - 5, சென்னை அவர்கள் மனுவை பரிசீலனை செய்து உத்தரவு பெற்று மனுவின் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய அறிவுறுத்தியதன் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு - 5 ன் குற்ற எண்.03/2024 பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (2018 ல் திருத்தப்பட்டது) மற்றும் BNSS பிரிவு 106 (Cr.PC பிரிவு 102)_ஆகிய பிரிவுகளின் கீழ் இன்று 24.10.2024, 11.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன், மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் த.சந்திரசேகரன், வட்ட கலால் அலுவலர், கிண்டி வட்டம், சென்னை, (சென்னை மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் உத்தரவின்பேரில்). பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகர பிரிவு-5, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. ந.க.எண்.233/2024/ICO/Chennai நாள் 24.10.2024, அய்யா, பொருள்- இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை, விருகம்பாக்கம், 45ஏ, ஆற்காடு ரோடு, விருகம்பாக்கம், சென்னை-92 முதல் தளத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை நாள் 23.10.2024 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக சென்னை மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் சென்னை நகர பிரிவு-5, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை நேற்று 23.10.2024-ம் தேதி சென்னை, விருகம்பாக்கம், 45ஏ, ஆற்காடு ரோடு, விருகம்பாக்கம், சென்னை-92 முதல் தளத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் ரூ.21,100/- (ருபாய் இருபத்து ஓராயிரத்து நூறு மட்டும்) மற்றும் 1.விருகம்பாக்க சார்பதிவக இயக்கப்பதிவேடு சான்றொப்பமிட்ட நகல், 2. விருகம்பாக்க சார்பதிவக தொகுதி எண்.17, தனிநபர் பண இருப்பு பதிவேடு, ஆரம்பம் 02.01.2024 மற்றும் 3.விருகம்பாக்கம் சார்பதிவக கையிருப்பு பதிவேடு (தற்காலிக பணியாளர்). ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த கூட்டுத் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள், பணம் ரூ.21,100/-, 1.விருகம்பாக்க சார்பதிவக இயக்கப்பதிவேடு

சான்றொப்பமிட்ட நகல், 2. விருகம்பாக்க சார்பதிவக தொகுதி எண்.17, தனிநபர் பண இருப்பு பதிவேடு, ஆரம்பம் 02.01.2024 மற்றும் 3.விருகம்பாக்கம் சார்பதிவக கையிருப்பு பதிவேடு (தற்காலிக பணியாளர்). இத்துடன் 1.திருமதி.ம.ரோஸ்லின் கவிதா பிரியா, இளநிலை உதவியாளர், திருமதி.வி.உமாமகேஸ்வரி, உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு), 3.டி.முருகன், ஐபி கேமரா ஆப்பரேட்டர் (தற்காலிக பணியாளர்), 4.திரு.எம்.மோகன்குமார், 5.சே.ஜான்சிராணி (கணினி தகவல் தொகுப்பு பணியாளர்), 6.திரு.எஸ்.முருகன் (கணினி தகவல் தொகுப்பு பணியாளர்) ஆகியோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய, ஒப்பம் 24.10.24 (த.சந்திரசேகரன்), வட்ட கலால் அலுவலர், கிண்டி வட்டம், சென்னை-32 இணைப்பு மேற்கண்டவாறு. Tmt.K.Bindhu, Inspector of Police register a case Sd// T.Kandasamy, Deputy Superintendent of Police, Chennai City-V, Chennai Dt.24.10.2024. Received the letter and registered a case in V&AC Chennai City-V Cr.No.03/2024 u/s 7 of the Prevention of Corruption Act 1988 (As Amended in 2018) and 106 BNSS (old 102 Cr.PC) Sd//-K.BINDHU, INSPECTOR OF POLICE/CC-V, 24.10.2024. இணைப்பில் உள்ள இருதுறை கூட்டுத்தணிக்கை அறிக்கை பின்வருமாறு சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.டி.சந்திரசேகரன், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சென்னை நகரப்பிரிவு-5 காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் இணைந்து இன்று 23.10.2024-ம் தேதி மாலை சுமார் 16.00 மணியளவில் சென்னை, விருகம்பாக்கம், 45ஏ, ஆற்காடு ரோடு, விருகம்பாக்கம், சென்னை-92 முதல் தளத்தில் இயங்கி வரும் விருகம்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை

| | |
|---|---|
| இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் | 1. திரு.த.சந்திரசேகரன்,<br>வட்ட கலால் அலுவலர்,<br>கிண்டி வட்டம், சென்னை-32<br>(சென்னை மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் உத்தரவின்பேரில்).<br><br>2. திரு.தி.கந்தசாமி,<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சென்னை நகரப்பிரிவு-5,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் |

| | |
|---|---|
| | துறை, சென்னை-16.<br>3. திருமதி.கே.பிந்து, காவல் ஆய்வாளர், சென்னை நகர பிரிவு-5 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை. |

விருகம்பாக்கம், 45ஏ, ஆற்காடு ரோடு, விருகம்பாக்கம், சென்னை-92 முதல் தளத்தில் இயங்கி வரும் விருகம்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவிற்கு வரும் பொதுமக்களிடம், பத்திர பதிவு செய்வதற்கு நேரடியாக கையூட்டு கேட்டு பெற்றுக் கொண்டு ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் விருகம்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்தில் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இவ் அலுவலகமானது 45ஏ, ஆற்காடு ரோடு, விருகம்பாக்கம், சென்னை-92 என்ற முகவரியில் உள்ள முதல் தளத்தில் இயங்கி வருகிறது. இது தனியார் வாடகை கட்டிடம் ஆகும். கீழ்தளம் வடக்கு நோக்கிய நுழைவாயிலுடன் அமைந்துள்ளனது. கீழ்தளத்தில் வாகனங்கள் நிறுத்துமிடமும் மற்றும் பதிவு செய்யவரும் பொதுமக்கள் அமர்வதற்கான இருக்கைகளும் போடப்பட்டுள்ளது. முதல் தளத்தில் பிரதான அறையில் வடக்குப் பக்கம் கண்ணாடி கதவு போட்ட நுழைவாயில் உள்ளது. அந்த அறையில் தெற்கு நோக்கி உள்ள மேசையுடன் கூடிய இருக்கையில் உதவியாளர் இருக்கை உள்ளது. அறையின் மேற்கு புறத்தில் இந்த அலுவலகத்தின் பிற பணியாளர்களின் இருக்கைகள் வரிசையாக கிழக்கு நோக்கி போடப்பட்டுள்ளது. மேலும், இந்த அறையின் மேற்கே கிழக்கு நோக்கி சார்பதிவாளர் மேசை மற்றும் நாற்காலி உள்ளது. சார்பதிவாளர் பதவி காலியாக உள்ளதால், அதில் யாரும் காணப்படவில்லை. உதவியாளர் திருமதி.வி.உமாமகேஷ்வரி என்பவர் கூடுதல் பொறுப்பாக சார்பதிவாளர் பதவி வகித்துவருவதாக தெரியவந்தது. கூட்டுத் தணிக்கை குழுவினர் மேற்படி சார்பதிவகத்தின் முதல் தளத்தில் ஆய்வு மாலை 16.00 மணிக்கு துவக்கப்பட்டது. ஆய்வின்போது, அலுவலகத்தில் பணியில் இருந்த திருமதி.ரோஸ்லின்கவிதா பிரியா, இளநிலை உதவியாளர் அவர்களிடம் மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் அவர்கள் தன்னையும் மற்றும் குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டு, திடீர் கூட்டுத் தணிக்கை செய்யப்போவதாக கூறி தன்னையும் மற்றும் குழுவினரையும் சோதனைக்கு உட்படுத்திக் கொண்டனர். ஆய்வின்போது உதவியாளர் திருமதி.வி.உமாமகேஷ்வரி தனது இருக்கையில்

இல்லை. உதவியாளரல் இருக்கைக்கு மேற்கில் உள்ள மேசையில் இருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் முருகன் என்றும், தான் தற்காலிக பணியாளராக விருகம்பாக்கம் சார்பதிவகத்தில் கடந்த இரண்டு மாதங்களாக பணிசெய்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் பொறுப்பு சார்பதிவாளர் குறித்து கேட்டபோது அவர் களப்பணிக்கு சென்றிருப்பதாக தெரிவித்தார். மேலும், சார்பதிவகத்தில் பணியில் இருந்த இளநிலை உதிவியாளர் திருமதி.ரோஸ்லின்கவிதா பிரியா என்பவரை கேட்டபோது அவரும் பொறுப்பு சார்பதிவாளர் அவர்கள் கள பணிக்கு சென்றிருப்பதாக தெரிவித்தார். விருகம்பாக்கம் சார்பதிவாளர் இயக்கப் பதிவேட்டை பார்வையிட்டபோது அதன் மூன்றாம் பக்கத்தில், வரிசை எண்.26-ல் 23.10.24 வி.உமாமஷேவரி, 4.00 மணி களப்பணி என்று எழுதப்பட்டு, சுருக்கொப்பம் செய்யப்பட்டிருந்தது. இந்த சுருக்கொப்பம் குறித்து திருமதி.ரோஸ்லின்கவிதா பிரியா என்பவரிடம் கேட்டபோது அது பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.வி.உமாமகேஷ்வரி என்பவரது சுருக்கொப்பம் என்று தெரிவித்தார். இளநிலை உதவியாளர் திருமதி.ரோஸ்லின் கவிதா பிரியா என்பவரிடம் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.வி.மகேஷ்வரி என்பவரை சார்பதிவக அலுவலத்திற்கு திரும்ப வருமாறு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அவரும் தனது அலைபேசி எண்.9840545171 என்ற எண்ணிலிருந்து பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.வி.உமாமகேஷ்வரி என்பவரது அலைபேசி எண்.7010169657-க்கு தொடர்பு கொண்டு கூட்டுத் தணிக்கை குழுவினர் வந்திருக்கும் விவரத்தை தெரிவித்தார். பின்னர், மேற்படி திருமதி.ரோஸ்லின்கவிதா பிரியா என்பவர் தான் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.வி.உமாமகேஷ்வரி என்பவரிடம் பேசியதாகவும், அவர் தான் களப்பணிக்கு சென்றிருப்பதாக தன்னிடம் தெரிவித்தாக கூட்டு தணிக்கை குழுவினரிடம் தெரிவித்தார். விருகம்பாக்கம் சார்பதிவக பிரதான அறைக்கு எதிரே தெற்கு பகுதியில் வடக்கு நோக்கி அமைந்துள்ள அறை வெளியே பூட்டப்பட்டிருந்தது. அந்த அறை குறித்து கேட்டபோது அந்த அறை சார்பதிவக பணியாளர்கள் உணவு அருந்தும் மற்றும் ஓய்வு எடுக்கும் அறை என்று திரு.முருகன் தெரிவித்தார். சந்தேகம் அடைந்த திடீர் ஆய்வுக் குழுவினர் அந்த அறையை திறக்கச் சொன்னபோது, முருகன் தன்னிடமிருந்த அந்த அறையின் சாவியை நீண்ட தயக்கத்திற்கு பிறகு திறந்தார். அப்போது அதன் உள்ளே ஒரு பெண்மணி நின்றிருந்தார். அவரை கூட்டுத்தணிக்கை குழுவினர் விசாரித்தபோது தனது பெயர் வி.உமாமகேஷ்வரி என்றும், தான் விருகம்பாக்கம் சார்பதிவக பொறுப்பு சார்பதிவாளர் என்று தெரிவித்தார். கூட்டுத் தணிக்கை குழுவினர் மேற்படி திருமதி.வி.உமாமகேஷ்வரி நின்றிருந்த அறை சோதனை

செய்யப்பட்டது. அந்த அறையில் உள்ள சாப்பாட்டு மேசையில் ஆங்காங்கே கத்தையாக பணம் காணப்பட்டது. அவற்றில் ஒரு பணக்கத்தையை எடுத்து எண்ணிப் பார்த்தபோது அதில் ரூ.17,500/-ம் மற்றொரு கத்தையில் ரூ.1,600/- மற்றும் ஒரு கத்தையில் ரூ.2,000/-ம் ஆக மொத்தம் ரூ.21,100/- காணப்பட்டது. அது குறித்து பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.வி.உமாமகேஷ்வரி என்பவரிடம் கேட்டபோது அவர் அதற்கு தகுந்த விளக்கம் அளிக்கவில்லை. எனவே, அப்பணம் அவர் வாங்கிய லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ரூ.21,100/- விசாரணைக்காக திடீர்தணிக்கை குழுவினரால் கைப்பற்றப்பட்டது. பின்னர், சார்பதிவக அலுவலகத்தின் முக்கிய அறையில் பின்வரும் நபர்கள் பணியில் இருந்தார்கள். 1.திருமதி.ரோஸ்லின்கவிதா பிரியா, இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்யபோது தன்னிடமிருந்த ரூ.390/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். 2.திரு.மோகன்குமார், அலுவலக உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது ரூ.1,080/- எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணம் குறித்து மேற்படி நபர்களிடம் கேட்டபோது தங்களது சொந்தப்பணம் என்று தெரிவித்தார்கள். விருகம்பாக்கம் சார்பதிவக தெகுதி எண்.17, தனிநபர் பண இருப்புப் பதிவேடு ஆரம்பம் 02.01.2024 என்ற பதிவேட்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது மேற்படி தொகை மேற்படி பணியாளர்களால் பதிவு செய்யப்பட்டு சுருக்கொப்பம் செய்யப்பட்டிருந்தது. எனவே, அந்தப் பணம் அவர்களிடமே திருப்பி வழங்கப்பட்டது. மேலும், இந்த அலுவலகத்தில் பணியில் இருந்த தற்காலிக பணியாளர் டி.முருகன் என்பவரை சோதனை செய்தபோது தன்னிடம் ரூ.1600/- இருப்பதாகவும் தெரிவித்தார். தனி நபர் ரொக்கப்பதிவேட்டை பார்வையிட்டபோது அதில் அத்தொகை டி.முருகனால் பதிவு செய்யப்பட்டு, சுருக்கொப்பம் செய்யப்பட்டிருந்தது. எனவே, அத்தொகை அவரிடமே திருப்பி வழங்கப்பட்டது. மற்றொரு தற்காலிக பணியாளர் சே.ஜான்சிராணி என்பவரிடம் அவர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது தன்னிடமிருந்த ரூ.200/- எடுத்து ஆஜர் செய்தார். ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பிட்டபோது அதில் ரூ.1000/- என்று பதிவு செய்து சுருக்கொப்பம் செய்திருந்தார். மீதி தொகையான ரூ.800/- குறித்து கேட்டபோது, அது தனது தங்கை ஐஸ்வர்யா என்பவரது செலவிற்காக அவரிடம் காலை 10.30 மணிக்கு கொடுத்துவிட்டதாக தெரிவித்தார். இது சம்பந்தமாக அவர் எழுத்துபூர்வமான விளக்கத்தை திடீர்தணிக்கை குழுவிடம் சமர்ப்பித்தார். பின்னர், விருகம்பாக்கம் சார்பதிவக பணியாளர்களின் மேசை, நாற்காலி மற்றும் பீரோக்கல் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் வடக்கே கண்ணாடி தடுப்பு அமைக்கப்பட்டு இந்த அலுவலகத்தின் கணினி சர்வர் அறை காணப்பட்டது. அந்த அறையிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி அறைகளில் எப்பணமும் கைப்பற்றப்படவில்லை. விருகம்பாக்கம் சார்பதிவக இரண்டாவது தளத்தில் பதிவறை உள்ளது. திடீர்தணிக்கை குழுவினரால் அந்த அறை சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த அறையிலும் எப்பணமும் கைப்பற்றப்படவில்லை. மேலும், விருகம்பாக்கம் சார்பதிவக அலுவலகத்திற்கு ஆவண பதிவு மேற்கொள்ள வந்த பொது மக்களின் விவரங்கள் மற்றும் அவர்கள் வைத்திருந்த ரொக்கம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

| SL NO | NAME & ADDRESS | REASON FOR VISIT | MOBILE NUMBER | CASH | REMARKS |
|---|---|---|---|---|---|
| 1 | K. GOPINATH M/A.46 NO.97/42, AADHIMOOLAPERUMAL KOIL STREET , VADAPALANI, CHENNAI - 600 026 | MODT | 9840586309 | 1200 | PERSONAL CASH. RETURNED |
| 2 | D. RATHINASAPAPTHY M/A63 S/O. DHANDAPANI, NO.72A, R.E. APPARTMENRTS, GROUND FLOOR, FLAT NO.3, PURASAIWALKAM, CHENNAI - 600 084 | EC ENQUIRY | - | 10500 | PERSONAL CASH. WITHDRAWN FOR PERSONAL USE. MONEY ACCOUNTED PROPERLY |
| 3 | ASHOK KUMAR M/A39 S/O KUMAR , NO.16, SAMANDAM NAGAR, KUNDRATHUR, CHENNIA - 600 069 | PENDING DOCUMENT ENQUIRY | 7402106196 | - | - |
| 4 | KUMARASAN M / A41 S/O. MURUGASEN NO.6/23C, BHARTATHI COLONY, V.O.C. STREET, VALASARAVAKKAM, CHENNAI 600 087 | SYSTEM SERVICE | 9965541291 | 1620 | PERSONAL CASH |
| 5 | SASIKALA R F/A32, W/O MARUTHAPANDI, NO.24, KANAGARATHARA APPARTMENT, KRISHNAMACHRI NAGAR 2ND STREET, 2ND FLOOR, | REGISTRATION BUYER | 8189895877 | 5000 | FOR REGISTRATION EXPENSES , AMOUNT ACCOUNTED |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ALAPAKKAM, CHENNAI 600 116 | | | | |
| 6 | SUBRAMANIAN M/F54, S/O KRISHNASAMY, OLD NO.30, NEW NO.57, ABRAHAM STREET, MYLAPORE, CHENNAI - 600 004 | REGISTRATION SELLER | 9940126686 | 400 | PERSONAL CASH |
| 7 | S. NARAYANAN M/60 S/O SRINIVASAN, NO.997C, NEW TECH KARPAGAMBAL 74TH STREET, 12TH SECTOR, K.K.NAGAR WEST, CHENNAI 600 078 | REGISTRATION RECEIPT NO.9680 / 2024, 9663/2024 | 9444024386 | 1000 | FOR REGISTRATION EXPENSES. AMOUNT ACCOUNTED |
| 8 | VEERASUDALAI M/F34, S/O CHELLAKUTTI, NO.170, 3RD STREET, CHENNAI 600 095 | REGISTRATION WITTNESS | 8668176413 | 1500 | FOR REGISTRATION EXPENSES , AMOUNT ACCOUNTED |
| 9 | SAROJA SELVANAGAYAM F/81, W/O SELVANAYAGAM, NO.11, SRIDEVI NAGAR 1ST CROSS STREET, VALASARAVAKKAM, CHENNAI 600 087 | REGISTRATION SELLER | SELVAKUMAR (SON) 8056824640 | 7500 | FOR REGISTRATION EXPENSES , AMOUNT ACCOUNTED |
| 10 | METHA JEBIN F/A43, NO.4/47, KANNAGI STREET, M.G.R. NAGAR, K.K.NAGAR, CHENNAI - 600 078 | REGISTRATION BUYER | 9790999585 | 8500 | FOR REGISTRATION EXPENSES , AMOUNT ACCOUNTED |
| 11 | DAMODARAN NO.3/116, GANGA NAGAR, MADURAVOYAL, CHENNAI 600 095 | GUIDELINE VALUE ENQUIRY | 9840030364 | 3580 | PERSONAL CASH |
| 12 | K.C. GANDHI, G1, AMBER , AIYASWARYA NAGAR, | DOCUMENT WRITER FOR METHA JABIN | 9566175681 | 18000 | REGISTRATION EXPENSES |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | AYANAMBAKKAM, CHENNAI - 600 085 | | | | |
| 13 | JOSPHIN MARY NO.124/5, ARCOT ROAD, VIRUMABAKKAM, CHENNAI 600 092 | WRITER OF SALE DEED | 8122114577 | NIL | - |
| 14 | M. KALAISELVI NO.24, KANADASA APPARTMENT, KRISHNAMACHARI NAGAR, MADURAVOYAL, CHENNAI 600 095 | DOCUMENT WRITER | 9941573829 | 2500 | REGISTRATION EXPENSES |
| 15 | S.P. MURUGASAN NO.26, RADA NAGAR MAIN ROAD, CHROMPET, CHENNAI 600 044 | DOCUMENT ENQUIRY | 9942208620 | 500 | PERSONAL USE |
| 16 | M. BHAVANI NO.28, SRI APPARTMENT, JAWAHAR STREET, WEST K.K.NAGAR, CHENNAI 600 078 | REGISTRATION BUYER | 9952050527 | 20000 | STAMP PAPER CHARGES |
| 17 | SRIMATHI NO.12, DHARSAN MANOR, SRINIVASA STREET, CHENNAI 600 078 | REGISTRATION SELLER | 9176201451 | 3000 | PERSONAL USE |
| 18 | SHYAMPRASATH M , FLAT NO.12, 3RD FLOOR, DHARSAN MANOR, SRINIVASA STREET, WEST K.K.NAGAR, CHENNAI 600 078 | REGISTRAION SELLER | 7002785353 | 40 | - |
| 19 | BALU, SRI APPARTMENT, NO.9, JAWHAR STREET, K.K.NAGAR, CHENNAI 600 078 | REGISTRATION BUYER | 9952050552 | 8800 | REGISTRATION EXPENSES |
| 20 | SHANKIL STANLEY NO.1/14, LOGANATHAN STREET, K.K.NAGAR, CHENNAI 600 078 | DOCUMENT ENQUIRY | 7010033123 | NIL | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | KALADEVI NO.24, KANAGARATHARA APPARTMENTS, KRISHNAMACHARI NAGAR, MADURAVOYAL, CHENNAI 600 095 | DOCUMENT ENQUIRY | 99415573829 | 2500 | PERSONAL CASH |
| 22 | B. IYAPPAN NO.157, KRISHNAPURAM COLONY 6TH STREET WEST EXTN., MADURAI, 625 014 | REGISTRATION BUYER | 9600086549 | 7000 | REGISTRATION EXPENSES |
| 23 | A.R. KANNAN 2E, J.D YASHICA 135, 136, RAJAMANNAR SALAI, K.K.NAGAR, CHENNAI 600 078 | REGISTRATION BUYER | 9444066854 | 1800 | PERSONAL CASH |
| 24 | MEENASHI SUNDARESWARI 2E, J.D. YASHIKA APPARMTMENTS, RAJAMANNAR SALAI, K.K.NAGAR, CHENNAI 600 078 | REGISTRATION BUYER | 9444057854 | 3000 | PERSONAL CASH |
| 25 | V. JAYAKUMAR, 43/2, VIVEKANANDA STREET, PALLIKARANI, CHENNIA 600 100 | DOCUMENT ENQUIRY | 9710667882 | 600 | PERSONAL CASH |
| 26 | BASKAR NO.48, ARCOT ROAD, VIRUGAMBAKKAM, CHENNAI 600 092 | DOCUMENT WRITER FOR K.GOPINATH | 9941186735 | 18000 | REGISTRATION EXPENSES |
| 27 | M. DURGAPARASATH NO.102/4, KALIYAMMAN KOIL STREET, VIRUGAMBAKKAM, CHENNAI 600 092 | DOCUMENT ENQUIRY | 9840430418 | 2000 | PERSONAL CASH |
| 28 | VENKATESAN NO.11, ANJUTHAM STREET, MEENAKSHI AMMAN NAGAR, ALWARTHIRUNAGAR, CHENNAI 600 087 | EC ENQUIRY | 7358428425 | 340 | PERSONAL CASH |
| 29 | N. SRINIVASAN NO.60, BENSE ROAD, CHEPAUK, CHENNAI 600 005 | POWER OF ATTORNEY ENQUIRY | 9444204009 | 3300 | PERSONAL CASH |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30 | SUMATHI NO.26/31, MUSAFER JUNK BAHATHUR STREET, TRIPLICANE , CHENNAI 600 005 | REGISTRATION SELLER | 9840032440 | 1500 | PERSONAL CASH |
| 31 | KATHIRESAN NO.7. UMATHURAI STREET, M.G.R. NAGAR, CHENNAI 600 078 | PARTNER IN PARTNER SHIP DEED REGISTRATION | 9043008575 | 135000 | AMOUNT ACCOUNTED PROPERLY |
| 32 | RAEEK SHRIEF NO.22, KUNDRAKUDIL NAGAR, ADAMBAKKAM, CHENNAI 600 088 | DOCUMENT ENQUIRY | 8124262787 | 400 | PERSONAL CASH |
| 33 | VIJAY NO.199, PILLAIYAR KOIL STREET, THIRUVANNAMALI MAIN ROAD, ALAMBOONDI , VILUPPURAM DISTRICT | REGISTRATION SELLER | 9655394853 | NIL | - |
| 34 | R. SHANKAR NO.89/6, PERUMAL KOIL STREET, ALAPAKKAM CHENNAI 600 116 | REGISTRATION SELLER | 9444242493 | 1400 | PERSONAL CASH |
| 35 | SAKTHIVEL NO.108, DURAI ARASAN STREET, SALIGRAMAM, CHENNAI 600 093 | DOCUMENT ENQUIRY | 9500050006 | NIL | - |
| 36 | SANKARAN NO.12, LAKSHMI STREET, 100 FEET ROAD, NANGANALLUR, CHENNAI 600 061 | DOCUMENT ENQUIRY | 9444023333 | NIL | - |
| 37 | VIVEK, NO.58, KASTHURI BAI AVENUE ALAGARSAMI NAGAR 3RD STREET, THIRUVERKADU, CHENNAI 600 077 | DOCUMENT ENQUIRY | 8939523954 | 8700 | REGISTRATION EXPENSES |
| 38 | ARCHANA NO.17/2, SATHYA GARDEN, K.K.NAGAR, CHENNAI 600 078 | DOCUMENT ENQUIRY | 9677818249 | NIL | - |
| 39 | L. SANTHOSH THOMAS NO.3, G.BLOCK, VENKATAPURAM, LITTLEMOUNT, | DOCUMENT ENQUIRY | 9841558459 | 470 | PERSONAL CASH |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | SAIDAPET, CHENNAI - 600 015 | | | | |
| 40 | A. PARTHIPAN NO.3/1, MAHALAKSHMI NAGAR MAIN ROAD, KARAMBAKKAM, PORUR, CHENNAI 600 116 | DOCUMENT ENQUIRY | 9841088992 | 650 | PERSONAL CASH |
| 41 | J.R. MANIKANDAN NO.3/1, MAHALAKSHMI NAGAR MAIN ROAD, KARAMBAKKAM, PORUR, CHENNAI 600 116 | DOCUMENT ENQUIRY | 7598979873 | 5000 | REGISTRATION EXPENSES |
| 42 | RADHA S, D/O. RAMANUJAM, ADMIN, AANIRUTH FLAT PROMOTORS PRIVATE LIMITED, NO - 4, LAKSHMI NAGAR, 10TH STREET, NANGANALLUR, CHENNAI - 61 | REGISTRATION OF PROPERTY IN THEIR CUSTOMER'S NAME | 9840029886 | 65750 | FOUND SUSPICIOUS AND A EXPLANATION LETTER WAS OBTAINED AND VOUCHERS RELATED TO THE AMOUNT VERIFIED AND RETURNED. |

மேற்படி பொதுமக்களின் ரொக்கப்பணங்கள் விசாரணைக்குப் பின் அவர்களிடமே திருப்பி வழங்கப்பட்டது. இந்த திடீர் கூட்டுத்தணிக்கையில் பின்வரும் ஆவணங்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 1. விருகம்பாக்க சார்பதிவக இயக்கப்பதிவேடு சான்றொப்பமிட்ட நகல், 2. விருகம்பாக்க சார்பதிவக தொகுதி எண்.17, தனிநபர் பண இருப்பு பதிவேடு, ஆரம்பம் 02.01.2024, 3. விருகம்பாக்கம் சார்பதிவக கையிருப்பு பதிவேடு (தற்காலிக பணியாளர்). இந்த திடீர் கூட்டுத்தணிக்கை குழுவின் சோதனையானது இன்று 23.10.2024 ம் தேதி மாலை 16.00 மணிக்கு தொடங்கி 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த சோதனையின்போது பொதுமக்களுக்கும் மற்றும் விருகம்பாக்கம் சார்பதிவக பணியாளர்களின் பணிக்கும் எந்த இடையூறும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், இந்த அலுவலகத்தில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் விழிப்புணர்வு பலகை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவில்லை. ஒப்பம்// (திரு.த.சந்திரசேகரன்), வட்ட கலால் அலுவலர் கிண்டி வட்டம், சென்னை (சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் உத்தரவின்பேரில்), ஒப்பம்//

(தி.கந்தசாமி), காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-5, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, , சென்னை, ஒப்பம்// (கி.பிந்து) காவல் ஆய்வாளர், சென்னை நகரப்பிரிவு - 5, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை, ஒப்பம்// (வி.உமாமகேஸ்வரி), உதவியாளர், கூடுதல் பொறுப்பு சார்பதிவாளர், விருகம்பாக்கம், ஒப்பம்// (ரோஸ்லின் கவிதாபிரியா), இளநிலை உதவியாளர், விருகம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகம்.

அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு.த.சந்திரசேகரன் புகார் மனு ந.க.எண். 233/2024/ICO/Chennai dated 24.10.2024 ன் அசல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

K.BINDHU
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Chennai City-V,
Alandur, Chennai - 16.